மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) 1978–79ஆம் ஆண்டிலிருந்து தாவரவியல் பட்ட மேற்படிப்பு வகுப்பு துவங்கப்பட்டு விட்டது.

திரு. கு. வடிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, கரூரில் இருக்கின்ற இந்தக் கல்லூரிக்கும்— திருச்சிக்கும் இடையில் ஐம்பது மைல் இருக்கிறது. ஈரோட்டுக்கும் கரூருக்கும் இடையில் ஐம்பது மைல் வித்தியாசம் இருக்கிறது. இடையில் கரூரில் இருக்கின்ற இந்தக் கல்லூரியில் தாவரப்படிப்பைத் தவிர பட்ட மேற்படிப்புக்கு எந்தவிதமான வழியுமில்லை. இது மாணவர் களையும் திருப்தி படுத்தவில்லை. மேற்கொண்டு பட்டப் படிப்பு வகுப்புகளை கரூரில் உள்ள கல்லூரியில் ஏற்படுத்துவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இத்தகைய குறை பாடுகள் பல கல்லூரிகளில் இருக்கலாம், இப்போது எடுத்துக் கொண்டிருக்கின்ற நடவடிக்கைகள் மூலமாக பல கல்லூரிகளிலும் புதிய பட்ட மேற்படிப்புகள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. பல்கலைக் கழகம்தான் இந்தக் கோரிக்கை களைப் பரிசீலனை செய்கின்றது. பல்கலைக் கழகம்தான் இதற்கு அனுமதி வழங்கவேண்டும்.

திருச்செந்தூரை நகராட்சியாக்கல்.

*வினா எண். 266— திரு. இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் திருச்செந்தூர், காயல் பட்டிணம், ஆறுமுகனேரி, கானம் ஆகிய பேரூராட்சி மன்றங் களை இணைத்து திருச்செந்தூர் நகராட்சியாக மாற்றி அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டியிலிருந்து செயல்முறைக் வரும் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

1979 மார்ச் 7]

திரு. இரா. அமிர்தராஜ்: தலைவர் அவர்களே, திருச் செந்தூர் என்பது பல ஆயிரக்கணக்கான பயணிகளும் பக்தர் களும் வந்து போகின்ற இடமாக இருக்கின்றது. இவர்களுக்குத் தேவைப்படும் வசதியான குடிதண்ணீர், பொது சுகாதாரம், வடிகால் வசதி போன்ற இவைகளை ஏற்படுத்த வேண்டியது தவிர்க்க முடியாத நிலையில் இருக்கிறது. ஆகவே திருச் செந்தூரையும், அருகிலுள்ள பேரூராட்சிகளையும் சேர்த்து திருச்செந்தூரை ஒரு நகராட்சியாக மாற்றுவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, பேரூராட்சியாக இருந்தாலும் சரி, நகராட்சியாக இருந்தாலும் சரி, குடிதண்ணீர், வடிகால் வசதிகளை செய்து கொடுக்க வேண்டியது அரசின் கடமையாகும். ஆகவே அதற்கான நட வடிக்கைகளை அரசு மேற்கொள்ளும். நகராட்சியாக மாற்ற வேண்டும் என்றால் மாவட்ட ஆட்சித்தலைவர் அதற் கான திட்டத்தை அனுப்பிவைத்தால் அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

பத்திரப்பதிவுக் கட்டணங்களில் பேரூராட்சிகள் பங்கு.

*வினா எண் 267—திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பேரூராட்சி மன்றங்களுக்கு நில விற்பனையின் மேல் கிடைக்கும் (Stamp duty) யை அந்தப் பேரூராட்சிகள், ஒன்றியங்கள் கணக்கில் ஈடு செய்ய தற்போது மாநில பத்திரப் பதிவாளருக்கு உள்ள அதிகாரத்தை மாவட்ட பத்திரப் பதிவாளர் களுக்கு மாற்ற அரசு தீர்மானித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது முதல் மேற்கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:

(அ) விதிகள் திருத்தப்பட்டுள்ளன.

(ஆ) 31–12–1978 உடன் முடிவடைந்த காலாண்டிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது.

திரு யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவரவர்களே, இந்த நடவடிக்கையை மேற்கொண்டதற்காக அரசுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.